**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 5 |
| Name : | திரு. சண்முகம் (காவல் உதவி ஆய்வாளர்) |
| Father's/Husband Name: | திரு. ராஜப்பா |
| Village : | அரும்பாவூர் காவல் நிலையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.02.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது அரும்பாவூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.07.2024ம் தேதி அன்று கைகளத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ருக்மணி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதனை பரிசீலனை செய்து புகார் வாக்குமூலத்தின் தன்மையின் அடிப்படையில் கைகளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 108/2024 பிரிவுகள் 296(b), 115(2), 74, 351(2) of BNSன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் **நிலையத்தில் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெங்கடேசன், கார்த்திக்கேயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் ருக்மணி, அலமேலு,

மாலதி, வெங்கடேசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். இவ்வழக்கு எதிரிகளை தேடி வந்த நிலையில் பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று தக்க நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை. சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் எதிரிகளின் செய்கையானது பிரிவுகள் 296(b), 115(2), 74, 351(2) of BNSன்படி கடந்த 25.07.2024ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் ருக்குமணியிடம் எங்கு வைத்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருக்கும்போது. எத்தனை மணிக்கு எனக்கு தகவல் வந்தது சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 01.07.2024 ம் தேதி மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது வேலைப்பளுவின் காரணமாக 03.07.2024ம் தேதி புகார்தாரரிடம் வாக்குமூலம் பெற்று 04.07.2024ம் தேதி தகவல் பெற்றேன். புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்தை குறித்து அவருடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சாட்சியகளை நேரடியாக சென்று விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்திலேயே அனைத்து ஆவணங்களை தயார் செய்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.